# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் (நிகழ்நிலை) பரீட்சை, ஆண்டு IV – 2022

# சுற்றாடல்ச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. சுற்றாடல்ச் சட்டக் கருத்தேற்புகளும் கோட்பாடுகளும் சர்வதேச தரத்தில் உயர்வாக போற்றப்படினும் உள்நாட்டு அளவுருக்களில் அவை அரிதாகவே மதிக்கப்படுகின்றன. இதன் விளைவொன்றாக, சுற்றாடல்ச் சட்டக் கருத்தேற்புகள் மற்றும் கோட்பாடுகளின் முக்கிய நோக்கங்கள் பெரும்பாலான தேசிய நியாயாதிக்கங்களினால் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்படவில்லை.

   தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று சுற்றாடல்ச் சட்டக் கருத்தேற்புகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் மேற்போந்த கூற்றினை நுணுக்கமாகப் பகுத்தாராய்க.

(100 புள்ளிகள்)

2. **<u>இரண்டு</u>** (02) வினாக்களுக்கும் விடை எழுதுக.

a) சுற்றாடல் தாக்க மதிப்பீடானது அபிவிருத்தி நிரல்ப்படுத்துதலில் சுற்றாடல் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதற்கு நடைமுறை மற்றும் பொருத்தமான வழிமுறையாகக் கருதப்படுகின்றது. ஆயினும், பல்வேறு காரணங்களினால் இலங்கையில் அண்மையில் தொடங்கப்பெற்ற அநேக செயற்றிட்டங்களில் இது நிகழவில்லை.

மேற்போந்த கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீரா? பொருத்தமான நியதிசட்டங்கள், சர்வதேச தராதரங்கள் மற்றும் வழக்குச்சட்டங்கள் என்பவற்றினுடாக உமது விடையினை விளக்குக.

b) பிரபல தொழிலதிபரான திருமதி ரூபாலி, இலங்கையின் தென் மாகாணத்தில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளார். அவர், முதலீட்டாளர்கள் குழுவுடன் இணைந்து, அதே மாகாணத்தில் முன்மொழியப்பட்ட ஹோட்டல் வளாகத்திற்கு அருகாமையில் ஒரு சூரிய வலுசக்தித் திட்டத்தைத் தொடங்க விரும்புகிறார். ஆயினும், அடையாளம் காணப்பட்ட காணியானது மீனவர்களின் கிராமத்திற்கு அருகில் உள்ளது. அவர்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் வேலை வாய்ப்புகளில் இதன் தாக்கம் எதிர்மறையாக இருப்பதால், இந்தத் திட்டத்தைப் பற்றிய தங்கள் கடுமையான கவலையினை அவர்கள்

ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளனர். ஏனெனில் முன்மொழியப்பட்ட திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக பயன்படுத்தப்படும் காணியின் கணிசமான பகுதியை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்விடத்தில் வசிப்பவர்களின் ஆட்சேபனைகள் இருந்தபோதிலும், திருமதி ரூபாலி தனது திட்டத்தைத் தொடர விரும்புகிறார். நீங்கள் திருமதி ரூபாலியின் வழக்கறிஞராவீர். இலங்கையில் செயற்றிட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் நடபடிமுறை குறித்து அவர் உங்கள் ஆலோசனையைப் பெற விரும்புகின்றார்.

திருமதி ரூபாலிக்கு ஆலோசனை கூறுக.

(40+60=100 புள்ளிகள்)

3. மட்டுப்படுத்தப்பட்ட **ஏபிசி** (தனியார்) கம்பனியானது புத்தளம் மாவட்டத்திலுள்ள கண்கவர் கிராமமொன்றான ‘வனாத்தவில்லு’வில் அமைந்துள்ள இரசாயன நிறுவனமொன்றாகும். உற்பத்தியளவை அதிகரிக்கும் நோக்கத்துடன் நிறுவனமானது இந்தியாவிலிருந்து ஒரு புதிய இயந்திரத்தை இறக்குமதி செய்கிறது. அதன்பின்னர், வார நாட்களில் காலை முதல் இரவு வரை இயந்திரத்தை இயக்குவதால், குடியிருப்புவாசிகளுக்கு தாங்க முடியாத இரைச்சல் ஏற்படுகின்றது. இதனால், குழந்தைகள், முதியவர்கள் உட்பட பலர் செவிக்கோளாறு பிரச்சினைகளால் அவதிப்படுகின்றனர். நிறுவனமானது, அவர்களின் திரவக் கழிவுகளை நேரடியாக “கலா ஓயா’’ நதிக்கு வெளியிடுகிறது, இந்நதியானது அண்மித்து வாழும் மக்களின் விவசாயம் உட்பட அன்றாட அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அதேசமயம், நிறுவனத்தின் பெரிய புகைபோக்கிகளிலிருந்து வெளியேறும் புகைவாயு நேரடியாக வளிமண்டலத்தில் வெளியிடப்படுவதால், வனாத்தவில்லு மக்களுக்கு அதிகளவான தோல் மற்றும் சுவாச நோய்களும் ஏற்படுகின்றன.

நீங்கள் புத்தளத்திலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணிபுரியும் சுற்றாடல் ஆர்வலர் எனக் கருதிக்கொள்க. மட்டுப்படுத்தப்பட்ட **ஏபிசி** (தனியார்) கம்பனியின் மீது தொடரப்படக்கூடிய சாத்தியமான வழக்கு நடவடிக்கைகளை முன்மொழிக.

(100 புள்ளிகள்)

4. ஐயத்திற்கிடமின்றி, மனித குலத்தின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்கான வாய்ப்புகளை நாடும் எவருக்கும் நீதித்துறையே கடைசி நம்பிக்கையாகும். இயற்கையின் உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் எவருக்கும் இது விதிவிலக்கல்ல. பல சந்தர்ப்பங்களில் நீதித்துறையானது, உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையில் அதன் முக்கிய அபிலாஷைகளுடன் சில அரசியலமைப்பு விதிகளை வரைவதன் மூலம் இயற்கையின் உரிமைகளை அங்கீகரிப்பதில் மேலதிக தொலை அடைவுகளைக் கடந்துள்ளது.

அரசியலமைப்புக் கட்டமைப்பிற்குள் இயற்கையின் உரிமைகளை நீதித்துறை எவ்வாறு உத்தரவாதம் செய்துள்ளது என்பதற்கான பொருத்தமான எடுத்துக்காட்டுகளின் அடிப்படையில் மேற்போந்த கூற்றினை சில நியாயாதிக்கங்களை எடுத்துக்காட்டுவதன் மூலம் விளக்குக. இவற்றை இலங்கையின் பின்னணியில் மதிப்பீடு செய்து மேம்பாடுகளுக்கான பரிந்துரைகளையும் முன்வைக்குக.

(100 புள்ளிகள்)

5. பின்வரும் சூழ்நிலைகளில் இடம்பெற்றுள்ள சுற்றாடல் பிரச்சினைகளைக் இனங்கண்டு, கிடைக்கப்பெறக்கூடிய தீர்வுகள் தொடர்பாக ஆராய்க. உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் கொள்கைகளைச் சுட்டிக்காட்டுமாறும், சர்வதேசத் தராதரங்களுடன் இணைந்ததான சாத்தியமான பரிந்துரைகளை முன்மொழியுமாறும் நீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

(அ) யால காடுகளுக்கு அருகில் 'தனமல்வில' அமைந்துள்ளது. யால என்பது துடிப்பான உயிரினங்கள் மற்றும் உயிரற்ற வளங்களைக் கொண்ட ஒரு தேசிய பாரம்பரிய வளமாகும். தனமல்வில வசிப்பவர்கள் வரையறுக்கட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக யால காட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள். எவ்வாறாயினும், தனமல்விலையைச் சேர்ந்த தனிநபர் குழுவொன்று, உணவுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் மான், மயில் மற்றும் கரடி போன்ற விலங்குகளை சட்டவிரோதமாக வேட்டையாடுகிறது. அதேசமயம், வனப்பகுதியை அண்மித்த பகுதியில் வசிப்பவர்கள் யானைகளின் வருகையினால் இரவும் பகலும் தொடர்ந்து அச்சுறுத்தல்களை அனுபவித்து வருகின்றனர். சில யானைகள் குடியிருப்பாளர்களைத் தாக்குவதோடு அவர்களின் பயிர்ச்செய்கைகளையும் வீடுகளையும் நாசப்படுத்துகின்றன.

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள 'கிரிந்த' என்பது கண்ணைக் கவரும் கடற்கரைப் பகுதியாகும். கடற்கரையின் ஒரு பகுதி அமைச்சரால் 'ஈர நிலமாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி ஆமைகள், பாம்புகள் மற்றும் நண்டுகள் உட்பட பல உயிரினங்களின் வாழ்விடமாக அமைந்துள்ளது. அண்மையில் ஜப்பானைச் சேர்ந்த நிறுவனமொன்று இப்பகுதியில் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டுள்ளது. அதன்படி, அவர்கள் தங்கள் திட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஈரநிலத்தின் எல்லைகளை வரையறுக்கின்றனர். இது இப்பகுதியில் வாழும் உயிரினங்களை எதிர்மறையாக பாதித்தது. மேலும், கிரிந்தயின் இயற்கையான கடற்கரைப் பூங்கா, பேரலைகள் காரணமாக சேதமடைந்தது. கரையோரப் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளே இப்பிரச்சினைக்கு பெருமளவில் பங்களித்துள்ளதாக நிபுணர்கள் அடையாளங் கண்டுள்ளனர். இறுதியில், தற்போது இவ்விடம் மனிதர்களின் பொழுதுபோக்கிற்கும், குடியிருப்புக்கும் பாதுகாப்பற்ற இடமாக மாறியுள்ளது.

(50 X 2=100 புள்ளிகள்)

6. தெற்காசியாவிலுள்ள விருத்தியடைந்துவரும் நாடொன்றான 'சன்லாந்து', பதிவுசெய்யப்பட்ட கோவிட்-19 பெருந்தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டதால், முகக்கவசங்கள் தொடர்பான விதிமுறைகளைச் சமீபத்தில் மாற்றியமைத்துள்ளது. முகக்கவச விதிகளில் திருத்தஞ் செய்யப்பட்டதன் விளைவாக, பெரும்பாலான தனிநபர்கள் முகக்கவசங்களைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, சரியான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் பயன்படுத்திய முகக்கவசங்களை சுற்றுச்சூழலில் வீசியுள்ளனர். இது நகர்ப்புறங்களில் பல பாரிய சுற்றாடல் பிரச்சினைகளுக்கு பங்களிப்பதோடு சன்லாந்துவினது சுத்தமான சுற்றாடலுக்கான உரிமையினையும் பாதிக்கின்றது. இதன் விளைவாக, சன்லாந்து பின்வரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது:

- முகக்கவசம் ஒரு திண்மக்கழிவாக கடுமையான மாசு அச்சுறுத்தல்களை நகர்ப்புறங்களில் ஏற்படுத்துகின்றது

- அப்புறப்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் வடிகால் மற்றும் வடிகால் அமைப்பைத் தடுப்பதால் பல்வேறு தொற்று நோய்கள் பரவுகின்றன.
- கடல் மற்றும் கடற்கரை பகுதிகள் மாசடைகின்றன.

முகக்கவச மாசுபாடு சன்லாந்துவில் மிகவும் மோசமான சுற்றாடல் அச்சுறுத்தலாக மாறியுள்ளதால், தலைமைச் சுற்றுச்சூழல் அதிகாரசபை இவ்விடயத்துக்கு தீர்வைக்காண்பதற்கு குழுவென்றை நியமிக்க முடிவு செய்துள்ளது.

நீங்கள் அக்குழுவின் உறுப்பினர் ஒருவரெனக் கருதிக்கொள்க. சன்லாந்துவில் முகக்கவச மாசுபாடு குறித்த சட்டப்பூர்வ அறிக்கையைத் தயாரிக்குமாறு உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான பரிந்துரைகளை அறிக்கையில் முன்மொழிய நீங்கள் எதிர்பார்க்கப்படுகின்றீர்கள். சன்லாந்துவினது சட்டம் இலங்கையின் சட்டத்தைப் போன்றதெனக் கருதிக்கொள்க.

(100 புள்ளிகள்)

************